කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

නො. 288, ශ්‍රී ජයවර්ධනපුර මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව.
இல. 288, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய, இலங்கை.
No. 288, Sri Jayawardenepura Mawatha, Rajagiriya, Sri Lanka.

***Translated Copy***

| | | |
|---|---|---|
| මගේ අංකය. / எனது இல. / My No. 7/1/NFS/FS/OC/2018(I) | ඔබේ අංකය. / உமது இல. / Your No. | දිනය. / திகதி. / Date. 06.04.2018 |

செயலாளர், பெருந்தோட்டத் துறை அமைச்சு,
செயலாளர், கனிஷ்ட தொழில்துறை அமைச்சு,
செயலாளர், சுற்றாடல் மற்றும் மகாவெலி அமைச்சு,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்,
பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம்,
பணிப்பாளர், தேசிய பசளை செயலகம்,
தலைவர், இலங்கை பசளைக் கம்பனி,
தலைவர், கொழும்பு கொமர்ஷல் பசளைக் கம்பனி,
பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்கள், சகல நேரடிப் பசளை இறக்குமதி கம்பனிகள்.

## நெற் தவிர்ந்த ஏனைய பயிர்களின் பொருட்டு புதிய மானியப் பசளை வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தல்.

விவசாய அமைச்சர் கௌரவ துமிந்த திசாநாயக்க அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 18/0624/728/021 என்னும் இலக்கமுடைய 31.03.2018 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தைக் கருத்திற் கொண்டு, அமைச்சரவையினால் 27.03.2018 ஆந் திகதி வழங்கப்பட்ட அனுமதியின் பிரகாரம், இதுவரையில் இருந்த மானியப் பசளை வேலைத்திட்டத்திற்குப் பதிலாக புதிய மானியப் பசளை வேலைத்திட்டம் 07.04.2018 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் 2018 சிறுபோகத்தின் பொருட்டு செயற்படுத்தப்படுகின்றது.

### மானியக் கொள்கை

1. 2018 சிறு போகம் ஆரம்பம் தொடக்கம் இதுவரையில் இருந்த பசளையைக் கொள்வனவு செய்யும் பொருட்டு விவசாயிகளுக்கு மானியப் பணம் வழங்கும் முறை இல்லாதொழிக்கப்படுவதுடன், அதற்குப் பதிலாக மானிய விலைகளின் கீழ் பசளையைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பம் விவசாயிகளுக்கு உரித்தாகின்றது.

2. இதன் கீழ் நெல் தவிர்ந்த ஏனைய பயிர்களின் பொருட்டு யூரியா, ரி.எஸ்.பீ., எம்.ஓ.பீ. மற்றும் அமோனியம் சல்பேட் ஆகிய நேரடிப் பசளைகள் 50kg பொதியொன்று ரூபா 1500.00 ஆன உச்ச சில்லரை விலைக்கு விவசாயிகள் கொள்வனவு செய்யலாம்.

3. தனியார் பசளை விற்பனை நிலையங்களில் மற்றும் நாடு பூராகவும் அமைந்துள்ள தனியார் பசளைக் கம்பனிகளின் பிராந்திய களஞ்சியங்களிலும் இந்நேரடிப் பசளைகளை மானிய விலையில் விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம்.

ලේකම් / செயலாளர் / Secretary — දුරකථන / தொலைபேசி / Telephone-2868920; ඊ-මේල් / மின்னஞ்சல் / E- mail -sec.agri@yahoo.com; ෆැක්ස් / தொலைநகல் / Fax -2863497
කාර්යාලය / அலுவலகம் / Office — දුරකථන / தொலைபேசி / Telephone - 2869553, 2872093, 2872097; ඊ-මේල් / மின்னஞ்சல் / E- mail - info@agrimin.gov.lk; ෆැක්ස් / தொலைநகல் / Fax - 2868910

4. ஏனைய பயிர்களின் பொருட்டு க்கிறனியூலர் யூரியா விற்பனை செய்தலாகாது என்பதுடன், அவை நெற் பசளையின் பொருட்டு மட்டும் 50kg பொதியொன்று ரூபா 500.00 ஆன மானிய விலைக்கு கமநல சேவைகள் நிலையங்களில் மட்டும் விற்பனை செய்தல் வேண்டும்.

5. இறக்குமதி மானியப் பசளை, மானியம் உரித்தற்ற ஏனைய இரசாயன பசளை மற்றும் உள்ளூர் பசளை (ரொக் பொஸ்பேட், டொலமையிட்) பாவனையில் உற்பத்தி செய்யப்படும் கலவைப் பசளையின் பொருட்டு உச்ச விலை எல்லை விடுக்கப்படாது எனினும், விற்பனைச் சந்தையில் கலவைப் பசளைகளின் விலைகள் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

<u>பசளைகளை இறக்குமதி செய்து விநியோகம் செய்வதற்குத் தொடர்புடைய நிறுவனங்கள்</u>

1. அமைச்சரவைத் தீர்மானத்தின் படி இலங்கைப் பசளைக் கம்பனி மற்றும் கொமர்ஷல் பசளைக் கம்பனி நெல் அல்லாத ஏனைய பயிர்களின் பொருட்டு பசளை இறக்குமதி செய்து விநியோகம் செய்யாது.
2. தேசிய பசளை செயலகத்தின் இறக்குமதி அனுமதிப்பத்திரம் உடைய நேரடிப் பசளைகளை இறக்குமதி செய்யும் பசளைக் கம்பனி மூலம் இப்பசளைகள் இறக்குமதி செய்து விநியோகம் செய்யப்படும். இலங்கையின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையிலும் மற்றும் விவசாயிகளுக்கு வசதியாக பசளையைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் அதிகாரம் பெற்ற் விற்பனை முகவர்கள் மூலம் வினைத்திறனாக விநியோகம் செய்வதற்கு வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தல் வேண்டும்.

3. இம்மானிய பசளை வேலைத்திட்டத்தின் பொருட்டு பசளையை இறக்குமதி செய்யும் சகல கம்பனிகளும் தமது வருடாந்த பசளைத் தேவைப்பாட்டை பசளை வகைகள் மற்றும் அளவுகளை மாதாந்தம் பகிர்ந்தளிப்பினைக் தெரிவித்து, பெறுகைத் திட்டமொன்றைத் தயாரித்து விரைவில் தேசிய பசளை செயலகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. இலங்கயில் பசளை பற்றாக்குறை ஏற்படாதவாறு மாதாந்த இறக்குமதி அளவுகளை தேசிய பசளை செயலகத்தின் சிபாரிசுடன் இறக்குமதி செய்வதற்கு சகல பசளை இறக்குமதி கம்பனிகளும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

5. இப்புதிய மானிய முன்மொழிவுத் திட்டம் செயற்படும் திகதிக்கு தேசிய பசளை செயலகத்தில் பசளையை இறக்குமதி செய்யும் பொருட்டு பதிவு செய்யப்பட்டுள்ள, 2018 ஆம் வருடத்திற்கான செல்லுபடியாகும் இறக்குமதி அனுமதிப்பத்திரம் உடைய சகல நேரடிப் பசளையை இறக்குமதி செய்யும் கம்பனிகளும் இப்பசளை மானிய வேலைத்திட்டத்தின் பொருட்டு கலந்து கொள்ளலாம். இருப்பினும் இத் தனியார் கம்பனி எவையும் நெல் மானியப் பசளை வேலைத்திட்டத்தில் பசளையை விநியோகிப்பதற்கு உரித்தில்லை.

6. தேசிய பசளை செயலகத்தில் செல்லுபடியாகும் பசளையைத் தயாரிக்கும் அனுமதிப்பத்திரம் உடைய நெற் செய்கையின் பொருட்டான பசளை வேலைத்திட்டத்துடன் தொடர்பற்ற நிறுவனங்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட, நேரடிப் பசளையை கொள்வனவு செய்து, தேசிய பசளை செயலகத்தின் அனுமதிக்கப்பட்ட கலவைப் பசளைக்கமைய, ஏனைய பயிர்களின் பொருட்டு பசளையை உற்பத்தி செய்வதற்கும் மற்றும் விநியோகம் செய்வதற்கும் தடையில்லை.

<u>பசளை இறக்குமதி ரேசனை ஒதுக்கிக் கொள்ளல்.</u>

1. விவசாய அமைச்சின் செயலாளர் மற்றும் பெருந்தோட்ட துறை அமைச்சின் செயலாளர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றின் மூலம் செய்யப்படும் சிபாரிசின் பேரில் தேசிய பசளை செயலகத்தின் பணிப்பாளரினால் பசளையை இறக்குமதி கம்பனிகளுக்கு மானியம் உரித்தான பசளையை இறக்குமதி செய்யும் பொருட்டு ரேசன் ஒதுக்கப்படுகின்றது.

2. கம்பனிகளின் கடந்த வருடங்களில் பசளையை இறக்குமதியின் வினைத்திறன் மற்றும் கம்பனிகளின் நிதி ரீதியான பலம் என்பனவற்றை அடிப்படையாக் கொண்டு இறக்குமதிக் ரேசன்கள் ஒதுக்கப்படுவது மேற்கொள்ளப்படுகின்றது.